Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 133/2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வராணி | Father Name | : | பன்னீர்செல்வம் |
| Village | : | சோத்தமங்களம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16th day of March 2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எனது பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை. நான் திருவிழாவின்போது கூட்ட நெரிசலில் கால் தவறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரணையில் மேற்சொன்னவாறுதான் கூறினேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமரச மனுவில் உள்ள புகார்தாரர் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சமரச மனு **அ.த.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

சம்பவத்திற்கு 20 நாட்களுக்கு முன்பு நாகமங்கலம் ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த ராஜேந்திரன் மகன் கல்யாணத்திற்கு எனது இளைய மகன் பாபநாசம் சென்று இருந்தார் என்றும் அப்போது கல்யாணத்திற்கு வந்த அதே நாகமங்கலத்தை சேர்ந்த ஊமை மகன் அய்யப்பன் எனது மகன் வைத்திருந்த பைக்கை வாங்கி சென்று உள்ளார் என்றும் வாங்கி சென்றவர் இரண்டு மணி நேரம் கழித்து வண்டியை கொண்டு வந்து கொடுத்தார் என்றும் ஏன்டா இவ்வளவு நேரம் என்று கேட்டதற்கு இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டுவிட்டது, நான் அதில் சமாதானம் ஆகிவிட்டேன் என்றும் அந்த பிரச்சனையை காரணமாக வைத்து அய்யப்பன் மாமா மகன் ஆஜர் 1 வது எதிரி 30.06.2018 தேதி அன்று மாலை 5 மணிக்கு என்னிடம் பிரச்சனை செய்தார், அவரை ஊரில் உள்ளவர்களிடம் சொல்லி அனுப்பிவிட்டேன் என்றும் பின்பு அவர் இரவு 30.06.2018 தேதி இரவு 8.30 மணிக்கு குடிபோதையில் வந்து எனது மகன்கள் இல்லாத நேரத்தில் என்னிடம் வந்து தரக்குறைவாக பேசினார்கள் என்றும் ஏன்டா என்னிடம் பிரச்சனை பன்னுற என்று ஆஜர் 1 வது எதிரியிடம் கேட்டதற்கு ஆஜர் 2 வது எதிரி லோகநாதன்தான் ரோசம் இருந்தா நீ போயி பிரச்சனை செய்ன்னு சொன்னார் என்று சொல்லி என்னை கீழே தள்ளிவிட்டு என் சேலையை பிடித்து இழுத்தார் என்றும் தெட்சிணாமூர்த்தி மகன் கீர்த்தி என்பவரும் ஓடி வந்தார்கள் என்றும் இவர்களை பார்த்த ஆஜர் 1 வது எதிரி உன் மகன்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு ஓடி விட்டார் என்று போலீசார் விசாரணையில் நடந்த உண்மையை கூறி புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து ஊர்க்காரர்கள் என்பதாலும் அவர்களுடன் சமரசமாக சென்றுவிட்டதாலும் அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற புகார் மனுவில் உள்ள விபரங்கள் பற்றி தெரியாது என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.16 18:59:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 133/2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கீர்த்தி | Father Name | : | தெட்சிணாமூர்த்தி |
| Village | : | சோத்தமங்களம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16th day of March 2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது ஊர்க்காரர்கள் ஆவார்கள். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 30.06.2018 தேதி இரவு 8.30 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது மணலூர் நாகமங்கலத்தை சேர்ந்த ஆஜர் 1வது எதிரி குடித்துவிட்டு வந்து எங்க

தெருவை சேர்ந்த அ.சா.1 ஐ முன் விரோதம் காரணமாக குச்சிக்காரி தேவடியா எனத் திட்டினார் என்றும் ஏன்டா இப்படி போதையில் வந்து எனது மகன்கள் இல்லாத நேரத்தில் என்னிடம் தகராறு செய்யுற என்று அ.சா.1 கேட்ட போது நான் அப்படி தான் பேசுவேன் மாரிமுத்து மகன் லோகநாதன் தான் ரோசம் இருந்தா நீ போயி பிரச்சனை பண்ணுடான்னு சொன்னார் என்று சொல்லி அ.சா.1ஐ கீழே தள்ளிவிட்டு சேலையை பிடித்து இழுத்தார் என்றும் அவர் போட்ட சத்தத்தில் அக்கம் பக்கத்தில் இருந்த நாங்கள் ஓடி வரவே உன் மகன்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு ஓடி விட்டார் என்று போலீசார் விசாரணையில் நேரில் பார்த்த உண்மையை கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற வழக்கு பற்றி தெரியாது என்றும் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.16 18:59:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 133/2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணிமேகலை | Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | நாகமங்களம் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | கூலிவேலை |
| Religion | : | | Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 16th day of March 2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது ஊர்காரர்கள். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நான் எனது வேலையை முடித்துவிட்டு வந்து கொண்டிருந்தபோது போலீசார் கேட்டதன் பேரில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது அல்ல. அதிலுள்ள விபரம் பற்றி தெரியாது. போலிசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 01.07.2018 ம் தேதி காலை 08.00 மணியளவில் நானும் எங்கள் தெருவை சேர்ந்த முத்தையன் மகன் கணபதி என்பவரும் சோத்தமங்களம் வழியாக சென்றுகொண்டிருந்தபோது இவ்வழக்கின் அ.சா.1 செல்வராணி கொடுத்த புகாரின் அடிப்படையில் வலங்கைமான் காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் பார்வை மகசர் தயார் செய்தார் என்றும் பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் நடந்த உண்மையை கூறிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.16 18:59:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.